இணைந்த சேவைகள் சுற்றறிக்கை : 01/2015
எனது இல. PA/CS/6/4/கா.க.பி. -III
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-07,

2015.02.10

அமைச்சுகளின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள் / பிரதேச செயலாளர்கள்,

**<u>அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை</u>**

2007.12.10 ஆந் திகதியில் இருந்து 2009.04.02 வரை ஆட்சேர்க்கப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை உரியவாறு நடாத்தப்படாமையின் அகாரணமாக அப்பரீட்சையில் சித்தியடைவது தொடர்பான சலுகைக்காலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

2. 2011.04.11 ஆந் திகதிய அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு நியமனம் பெற்ற சகல அலுவலர்கள் தொடர்பாகவும் அவ் வகுப்பிற்குரிய முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை சித்தியடைவது தொடர்பாக 2011.04.11ஆந் திகதியில் இருந்து நடாத்தப்படுகின்ற தொடர்ச்சியான 04 பரீட்சைத் தவணை சலுகைக்காலம் பின்வருமாறு வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| நியமனத் திகதி | சலுகைக்காலம் வழங்குவது குறித்து கவனத்திற் கொள்ளப்படும் பரீட்சைகள் நடாத்தப்பட்ட தினங்கள் |
|---|---|
| 2011.04.11 | 2011.10.01 |
| | 2013.01.27 |
| | ...................... |
| | ...................... |

3. அதற்கமைய மேற்படி தினத்தில் நியமனம் பெற்ற அலுவலர்கள் குறித்த 04 பரீட்சைத் தவனைகளுள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தும் பட்சத்தில், சம்பள ஆண்டேற்ற முரண்பாடுகள் நிலாவது. அத்துடன் ஏனைய அலுவலர்கள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை பூர்த்தி செய்யும் தினம் வரையில் நன்நடத்தைக் காலம் நீடிக்கப்படும்.

4. மேற்படி 03ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை சித்தியடைந்து, ஏற்கனவே சம்பள ஆண்டேற்ற முரண்பாடுகள் நிலவுகின்ற அலுவலர்களின் நன்நடத்தைக் காலம் திருத்திமைக்கப்படுவது தொடர்பாக நிறுவனத் தலைவர் ஊடாக கோரும்படியும் மேலும் அறிவிக்கின்றேன்.

ஒப்பம்/:கே.வீ.பீ.எம்.ஜே.கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.